DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.5/2023**

Deposition of witness for Prosecution அ.சா.4

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜீவாதாசன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | அழகப்பன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 18.02.2026

எதிரி ஆஜர் இல்லை. அவரைப் பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் மாவிடுதிகோட்டையில் வசித்து வருகிறேன். எதிரியை தெரியும். கடந்த 28.01.2022 ம் தேதி நான் ஆண்டவர் செட் அருகே நான் காலை 5 மணியளவில் வந்துகொண்டிருந்தபோது தேவகோட்டை நகர காவல் நிலைய சார்பு ஆய்வாளர் எதிரி கனகராஜ்-ஐ பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார். நானும் சாட்சி ராஜேஷ்ம் வண்டியில் வந்து கொண்டிருந்தோம். அப்போது விசாரித்துக் கொண்டிருந்தது தொடர்பாக நீதிமன்றத்தில் வந்து சொல்ல முடியுமா என்று கேட்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 ம் கையெழுத்து

என்னுடையதுதான். (**மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2ம் கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். என்னிடம் போலீசார் அன்று காலை 5 மணிக்குதான் விசாரித்தார்களா என்றால் ஆமாம். என்னிடம் விசாரித்த போலீசார் பெயர் தெரியுமா என்றால், தெரியாது. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால், என்னை போலீசார் அன்று மாலை காவல் நிலையம் வர சொல்லி கையெழுத்து வாங்கினார்கள். காவல் நிலையத்தில் நான் மட்டும்தான் கையெழுத்து போட்டேனா என்றால், நானும் ராஜேஷ்குமாரும் போட்டோம். காவல் நிலையத்தில் எந்த காவலர் கையெழுத்து வாங்கினார் என்று எனக்கு ஞாபகமில்லை. ராஜேஷ்குமார் கையெழுத்து போட்டதை நான் பார்த்தேனா என்றால் கையெழுத்து போடுவதை பார்க்கவில்லை அவர் காவல் நிலையத்தில் இருந்தார். அ.சா.1ம் நானும் ஒரே ஊர்க்காரர்கள். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றும் அ.சா.1 என் ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.